**கிண்ணியா பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

கிண்ணியா பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் உள்ளிட்ட ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிண்ணியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பாதகமான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) (ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| அ) | கடந்தாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதியில் திரண்ட நிதியின் மீதியாக ரூபா 1,568,165 காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு ஆரம்ப மீதியாக ரூபா 8,397,438 எனக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்ட மையினால் ரூபா 6,829,273 ஆல் திரண்ட நிதி அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்கறிக்கைகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளின் சரியான தன்மையை உறுதிப் படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ஆ) | மீளாய்வாண்டுக்கான வருமான மிகையான ரூபா 4,583,208 தொகையினை திரண்ட நிதியக் கணக்கிக்கு செலவு வைப்பதற்குப் பதிலாக வரவு வைக்கப்பட்டிருந்த மையால் திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 9,166,416 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | தவறுதலாக ஏற்பட்ட ஒரு கணக்கீட்டு வழுவாகும். இதனை கூடிய விரைவில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களை உரிய முறையில் தயாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| இ) | மாகாண குறித்தொதுக்கப் பட்ட அபிவிருத்தி நிதிய மானிய (PSDG) செயற்திட்டங்கள் மற்றும் உள்ளூர் அபிவிருத்தி ஊக்கிவிப்புச் செயற்திட் டங்களுக்கான (LDSP) ரூபா 5,901,949 செலவினம் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படாமையினால் மீளாய் வாண்டுக்கான செலவினம் ரூபா 5,901,949 இனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளதுடன் இலாபம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | வருமானக் கணக்கில் இடப்ப டும் என்பதை அறியத்தருகின் றேன். | செலவினத்தை வருமா னக் கணக்கில் உள்ள டக்கி, நிதிக்கூற்றுக் களை உரிய முறை யில் தயாரித்து சமர்ப்பி க்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஐந்தொகையின் பிரகாரம் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,818,291 ஆகக் காணப்பட்ட போதிலும், கடன் கொடுத்தோர் பதிவேட்டின் படி மீதி ரூபா 2,925,091 ஆக காணப்பட்டமையால் ரூபா 106,800 ஆன வேறுபாடொண்டு காணப்பட்டது. | இம் மீதியினை பதிவழிப் புச் செய்வதற்காக சபைத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | வேறுபாட்டை கணக்கி ணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) 24 ஆம் பிரிவு | பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளை இனங்கண்டு அவற்றை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிரு க்கவில்லை. | விரைவில் இவ்வீதி களை வர்த்தமானி யில் பிரசுரிப்பதற்காக நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. | வீதிகளை இனங்க ண்டு அவற்றை உரித்தாக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண் டும். |
| (ii) 126 ஆம் பிரிவு | பிரதேச சபையின் எல்லைக் குள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் மீது உரிய கட்டணத்தை | விளம்பரப் பலகை தொடர்பாக பொருத் தமான நடவடிக்கை எம்மால் | பிரதேச சபை சட்டத்திற்கிணங்க நடவடிக்கை மேற் கொள்ளப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ள ப்பட்டு தங்களுக்கு அறியத் தரப்படும். | வேண்டும். |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக ஒழுங்குவிதிகளின் அத்தியாயம் X பிரிவு 193 | வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் பாதீட்டுடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங் களை உள்ளடக்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டிருக் கவில்லை. | நிதி நிர்வாக விதிகளின் பிரகாரம் எதிர் காலத்தில் இக்கூற்றுக்கள் தயாரிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என அறியத்தருகிறேன். | பிரதேச சபைகள் நிதி நிர்வாக விதியின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை<br>---------------------------------<br>நிதிப்பிரமாணம் 1646 | சபையின் பாவனையிலுள்ள 13 வாகனங்களின் நாளாந்த வாகன ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு என்பவற்றின் மூலப் பிரதிகள் மாதாந்தம் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. | சபையினுடைய சகல வாகனங்களுக்குமான நாளாந்த வாகன ஓட்ட அட்டவணை மற்றும் பொழிப்பு என்பன பிரதி மாதமும் தங்களுக்கு விரை வில் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது. | நிதிப்பிரமாணத்திலுள் ள ஏற்பாடுக ளுடன் இணங்கி ஒழுகுவதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2016.12.29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் 3.1 பந்தி. | பிரதேச சபையில் பாவனையில் உள்ள 07 வாகனங்களுக்கு எரிபொருள் பரீட்சிப்பு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விரைவில் இவ்வாகன ங்களுக்கான எரிபொ ருள் நுகர்வுப் பரிசோ தனை மேற்கொள்ளப் படும். | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (ஊ) | 2021.08.16 ஆம் திகதிய PT/03/2021 ஆம் இலக்க மாகாண நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 880 | பிரதேச சபையில் பணியாற்று கின்ற, பாதுகாப்புப் பணம் அறவீடு செய்யப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பாதுகாப்பு வைப்புப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பில் பொருத்தமான அதிகா ரிகளின் ஆலோசனை யின் பிரகாரம் நடவ டிக்கை மேற்கொள்ள ப்படும். | குறித்த சுற்றறிக் கை மற்றும் நிதிப் பிராமணத்திற்கு அமைய நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 4,583,208 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 6,829,272 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அசையாத ஆதனங்களிலிருந்து கடந்த 05 வருடங்களுக்கு மேலாக ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை. | உத்தேச மதிப்பில் இத் தொகை காட்டப்பட்டுள் ளது. | ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) வாடகை | | |
| (i) 2007 முதல் 2021 வரையான காலப்பகுதிக்கு குத்தகையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,382,901 பெறுமதியான குத்தகை வருமானத்தை உரிய குத்தகையாளர் களிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இதனை முறையாகப் பரிசீலித்து விட்டொழிப்புச் செய்வதற்கான சபைத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது | குத்தகை வாடகை யை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) கடை வாடகை ஒப்பந்தத்திற்கு அமைய மீளாய்வாண்டுக்கான வாடகை வருமானம் ரூபா 4,814,648 ஆகக் காணப்பட்ட போதிலும் அதில் ரூபா 1,505,585 மட்டுமே அறவிடப்பட்டுள்ளது. | இது தொடர்பில் உரிய கணக்குகள் முறையாக பரிசீலிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | ஒப்பந்தத்திற்கு அமைய நிலுவை வாடகை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் ரூபா 380,484 பெறுமதியான முற்பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்புச் செய்வதற்கு சபைத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | இத்தொகையை புத்தக ங்களிலிருந்து அகற்று வதற்கு அல்லது அதனை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணைச் சட்டங்கள் விதிக்கப்பட முடியுமாயிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரை 05 விடயங்களுக்காக மாத்திரமே துணைச்சட்டங்கள் விதிக்கப்பட்டிருந்தன. | வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்ட 5 துணைவிதிகள் தவிர ஏனைய விடயங்களுக் கான துணை விதிகள் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. | சம்பந்தப்பட்ட விடயங் கள் தொடர்பில் துணைச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டு கண்கா ணித்தல் நடவடிக் கைகள் மேற்கொள்ள ப்பட வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| அ) | **பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்** | | |
| | சபைக்குச் சொந்தமான 05 வகைகளின் கீழுள்ள 07 சொத்துக்கள் உரிய தேவைகளுக்காக 03 மாதங்கள் தொடக்கம் 05 வருடங்கள் வரை பயன்படுத்தப்படாதிருந்தன. | இது தொடர்பில் பரிசீலிக்கப் பட்டு பொருத்தமான நடவடி க்கை மேற்கொள்ளப்படும். | சொத்துக்களை பயன்படுத்த நடவடி க்கை மேற்கொள்ள ப்படல் வேண்டும். |
| ஆ) | **உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள்** | | |
| | 2018 ஆண்டு ஒக்டோபர் 10ஆம் திகதிய MF/CO/02(cir) இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் தமக்கு சொந்தம் இல்லாத தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற 09 வாகனங்கள் தொடர்பாக பயன்படுத்தல் உரிமையை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை சபையினால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் யாவும் சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை பயன்படுத்தும் உரிமையை பெற்று க்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| இ) | **வருடாந்த பொருட்கள் மீளாய்வு** | | |
| | நேரடிச் செவ்வையில் சபையின் களஞ்சிய நுகர்வுப் பொருள் இருப்புக்களிலுள்ள 13 வகையின் கீழான 97 பொருட்கள் பற்றாக் குறையாகவும், 07 வகையான 143 பொருட்கள் மேலதிகமாகவும் காணப்பட்டிருந்தன. | இது தொடர்பில் முறையாக பரிசீலிக்கப்பட்டு அதன் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்ப டும். | இருப்புக் கட்டுப்பா ட்டுக்காக உரிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை அறிமுகப்படுத்தப்பட ல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் ரூபா 27,272,144 செலவிடப்பட்டு திண்மக்கழிவு சேகரிக்கும் நிலையம் 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதிவரை ஆரம்பிக்கப்பட்டிருக்காமையபல், எதிர்பாத்த விளைவினை அடைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. | மிக விரைவில் இத் திட்டத்தினை அமுல்படுத்து வதற்குரிய நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. | சபையின் நோக்கங் களை அடைவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டி 2006 இன் 4.2.1(அ) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் பிரதேச சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தொடராக இப்பெறுகைத் திட்டம் தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் படும். | பெறுகைத் திட்டம் உரிய முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையின் செயலாளர் பதவி மற்றும் நூலகர் பதவி வெற்றிடமாக காணப்பட்டிருந்தது. | இது தொடர்பில் பொருத் தமான அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய உத்தியோகத்தர் நியமனிக்கப்படல் வேண்டும். |

## 3.7 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ரூபா 18,799,710 பெறுமதியுடைய 19 மோட்டார் வாகனங்களில் 06 வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் 02 வாகனங்களை திருத்தம் செய்வதற்கும் இருப்பு கணிப்பீட்டு சபையினால் சிபாரிசு செய்யப்பட்ட போதிலும், 03 வருடங்களுக்கு மேலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏலமிடும் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். | சொத்துக்களின் கட்டுப் பாடு தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொ ள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய நிதிக் கூற்றுக்களுடன் இணைத்து வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட காலப்பகுதிக்கு முன்னர் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு ஓர் ஆண்டினுள் ரூபா 496,275 சம்பலமாக வழங்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் கணக்காய்வு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சபையினுடைய நிதி நிர்வாகம் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது. | போதியளவு உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கு சட்டத்திக்கு அமைவாக, 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் சபையினால் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைவது தொடர்பில் சபையினால் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டு அவற்றினை செயற் படுத்துவது தொடர்பில் சகல அலுவலக குழாத்தினரும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |